REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 23உ வியாழன் (8—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 24உ வெள்ளி (9—9—55) [இதழ் 74

கராச்சிக்கு இயற்கை வாயு!

பலுசிஸ்தானில் உள்ள சுயி எனும் இடத்திலிருந்து குழாய் மூலம் பாகிஸ்தானுக்கு முதன் முதலாக, காரச்சி நகருக்கு இயற்கை வாயு அனுப்பப்படுகிறது.

எண்ணெய், மற்றும் நிலக்கரி ஆகியவற்றினை எரி பொருளாக உபயோகித்து நடைபெறும் தொழிற்சாலைகள், இனி இந்த இயற்கை வாயுவை எரிபொருளாக உபயோகிக்கும் என்று தெரிகிறது.

சுமார் 16 லட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரிக்குச் சமமான அளவு, ஆண்டு ஒன்றுக்கு இயற்கை வாயுவை காரச்சி உபயோகிக்கும் என்று தெரிகிறது.

'தமிழ் மொழியை நழுவ விட்டு வேற்று மொழியை தழுவுகின்றனர்'

'தாய் மொழிக்குத் தனிக் கழகம் ஏன்?'

'ஏற்றமும் இடமும் இன்னமும் தமிழுக்கு ஏன் தரப்படவில்லை?'

சட்டக் கல்லூரியில் அண்ணாதுரை

"நாட்டில் இன்று, மாணவர்களிடம் மட்டுமின்றி, பொதுவாக மக்களிடத்திலேயே தமிழ் உணர்வு மேலிட்டு வருவதைக் காண்கிறோம்;

"நாட்டு மக்களிடத்தில் தமிழ் உணர்வு மங்காமல்—குறையாமலிருக்க, மாணவர் தமிழ் மன்றங்கள் பாடுபடவேண்டும் என்று விரும்புகிறேன்;

"சட்டக் கல்லூரி, பொறி இயற்கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவைகளில் மாணவர்கள் தமிழ் மன்றங்கள் துவக்கி பணி புரிவது மிகவும் அவசியமான ஒன்று என்றும் கருதுகிறேன்;

"பொதுவாக இன்று கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மாணவர்கள் தமிழ் மன்றங்கள் துவக்கினால், பேராசிரியர்களும்—ஆசிரியர்களும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர்;

"துவக்கப்படுகின்ற தமிழ் மன்றங்களினால், மாணவர்கள் எந்த வகையால் பாதிக்கப்பட்டுவிடுவோர் என்று அவர்கள் கருதுகின்றனரோ தெரியவில்லை?

"ஆங்கில நாட்டில் ஆங்கிலத்திற்கும், ஜெர்மன் நாட்டில் ஜெர்மன் மொழிக்கும், பிரான்ஸ் நாட்டில் பிரெஞ்சு மொழிக்கும் தனிக் கழகங்கள்—மன்றங்கள் இல்லை; அந்தந்த நாடுகளில் வேறு வேறு மொழிகளின் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்குமாகக் கழகங்கள் இருக்கலாம்; ஆனால் தமிழ் நாட்டில் தாய் மொழியான தமிழ் மொழிக்குத் தனிக் கழகங்கள், மன்றங்கள் துவக்கப்படுகின்றன;

"மேலைநாடுகளில் தாய் மொழிக்கென தாய் நாட்டில் தனிக் கழகங்கள் இல்லை; ஆனால், இங்கு மட்டும் தனிக் கழகங்கள், மன்றங்கள் தோன்றவேண்டிய அவசியமிருக்கின்றது; என்ன காரணம்?

"அந்தந்த நாடுகளில், அவரவர் தாய் மொழிகள் ஆட்சி மொழியாக வீற்றிருக்கின்றன; அவற்றிற்கு, ஏற்றமும், இடமும், மதிப்பும் எல்லாத்துறைகளிலும் தரப்படுகின்றன; நமது நாட்டில், தமிழ் மொழிக்கு அந்த ஏற்றமும், இடமும் எந்தத் துறையிலும் இன்று கிடைக்கவில்லை;

"நமது தாய்மொழியான தமிழுக்கு நமது ஆட்சி பீடத்தில் இடம் இல்லை—மதிப்பில்லை—என்ற நிலை நாட்டில் இருப்பதால், மாணவர்கள் தங்கள் தமிழ் மன்றங்களைப் பற்றியும், அவற்றின் நடைமுறைகளைப் பற்றியும், கல்லூரிகளில் அவைகளுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை என்பதைப் பற்றியும் கவலைப்படும்போது, மனதில் கொள்ள வேண்டியதெல்லாம், பொதுவாகவே, தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கு உரிய இடம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதுதான்;

"நீதிமன்றங்களில் வழக்காடுதல் போன்ற காரியங்களுக்கு தமிழ் உபயோகப்படுத்தப்படுவதில்லை; ஆங்கிலத்தையே உபயோகப்படுத்துகிறார்கள்; 'ஆங்கில மொழிதான் அந்தக் காரியங்களுக்குப் பயன்படும்—தமிழ் மொழி பயன்பட முடியாது' என்பதல்ல, இந்த நிலைக்குக் காரணம்;

"ஆங்கில மொழியையே உபயோகிப்பதற்குக் காரணமாக எனக்குத் தெரிவதெல்லாம், மூன்று:—தமிழ் மொழியில், சட்ட நுணுக்க, தொழில் நுணுக்கச் சொற்கள் இல்லை என்று கூறுவது; இரண்டாவது, 'ஆங்கிலத்தில் பேசுவதுதான் பெருமதிப்பு' என்ற பழக்கவாயிலாக எண்ணுவது; மூன்றாவது, தங்களுக்குள்ள ஆங்கில அறிவைக் காட்டிலும், பிறருக்கு இருக்கும் ஆங்கில அறிவு குறைவு என்பதைக் காட்டுவதும் தான்;

"இந்தக் காரணங்களை எண்ணிப் பார்த்தால், 'நமது தாய் மொழி தமிழில் காரியங்கள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உண்டா—இல்லையா' என்பது தெரியவரும்;

"தமிழ் மொழியில், இப்போது வளர்ந்திருக்கிற விஞ்ஞானக் கலைக்கும், சட்ட திட்டங்களுக்கும் ஏற்ற நுணுக்கச் சொற்கள் உருவாக்கப்படவில்லை—என்பதுதான் உண்மையே அன்றி, உருவாக்கப்படவே முடியாது என்பதல்ல;

"அண்மையில் சென்னை மந்திரி ஒருவர், 'திருச்சி மாவட்டத்தில் சர்க்கார் அலுவல்களை தமிழ் மொழியில் நடத்தினோம், அது வெற்றி பெறவில்லை; உதாரணமாக, திருச்சியிலிருந்து

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

மக்கள் பண்பாட்டை அறிய முயற்சி?

மொழிவாரி 'சர்வே' நடைபெறுமாம்

"எல்லா மொழிகளின் தன்மையையும், பேச்சு முறையையும் படித்து, மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன், இந்தியாவில், மொழிவாரியான 'சர்வே' நடத்துவதற்கு சர்க்கார் யோசித்து வருகிறது" என்று, மக்கள் சபையில், கல்வியமைச்சர் அபுல்கலாம் ஆசாத் அறிவித்துள்ளார்.

5,000 சுரங்கத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

'போனஸ்' கோரி நடவடிக்கை

இராபர்ட்சன்பேட்டை, செப். 7—

கோலார் தங்கவயல் நிர்வாகிகளுக்கும்—தொழிலாளர்களுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்ட முடிவுகளின்படி தங்களது சம்பள பாக்கியும், 1952-ம் ஆண்டுக்கான போனசும் உடனடியாகத் தரப்பட வேண்டும் என்று கோரி, சாம்பியன் ரீப் சுரங்கத்தைச்சேர்ந்த சுமார் 5,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இதே கோரிக்கைகளுக்காக மைசூர் சுரங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஆலைமுன் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்; ஆனால் அவர்களது தலைவர், இந்த விஷயம் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி கூறியதின்பேரில், அவர்கள் உடனே வேலைக்குத் திரும்பிவிட்டனர் என்று தெரியவருகிறது.

பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமுல் செய்ய தாங்கள் ஆவலுடனிருப்பதாகவும், ஆனால் ஒப்பந்தத்திற்கு இன்னும் மைசூர் சர்க்காரின் ஒப்புதல் கிடைக்கவில்லை என்றும், அதற்காகத்தான் காத்திருப்பதாகவும் நிர்வாகிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

புதுவையின் சட்டபூர்வமான அதிகார மாற்றம்!

புதுத் தேர்தல் அறிவிப்பை மந்திரி திரும்பப் பெறுகிறார்

புதுடில்லி, செப். 7—

புதுவை சட்டபூர்வமாக இந்தியாவுடன் இணைந்த பிறகு மீண்டும் அங்கு தேர்தல் நடைபெறலாம் என்று ஏற்கனவே தான் தந்த அறிவிப்பை, உதவி வெளிநாட்டிலாகா மந்திரி ஏ. கே. சந்தா மக்கள் சபையில் திரும்பப் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

"இப்போது, புதுவையின் சட்டபூர்வ அதிகார மாற்றத்திற்குப் பிறகு நடைபெறவேண்டியவை குறித்து எதுவும் கூறக் கூடாது; சட்டபூர்வ மாற்றம் நிகழ்ந்த பின்னர் நடைபெற வேண்டிய எல்லாக் காரியங்கள் குறித்தும் யோசிக்கப்படும்," என்று, அவர் தனது திருத்த அறிக்கையை மக்கள் சபையில் தாக்கல் செய்திருக்கிறார்.

கடந்த செப்டம்பர் முதல் தேதியன்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், சட்டபூர்வ அதிகார மாற்றத்திற்குப் பின் புதிய தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருந்தார்.

ஆனால் அப்படி அறிவித்தது, சட்டபூர்வ மாற்றத்திற்குப் பின் புதுத் தேர்தல் நடத்த ஏற்கனவே திட்டமிட்டிருப்பதாகப் பொருள்படும் என்பதால், இப்போது அந்த அறிவிப்பை திருத்திக் கொண்டிருப்பதாக மந்திரி தெரிவித்திருக்கிறார்.

'குடிசைத் தொழில் மாதிரி' திட்டமாம்!

மத்திய சர்க்கார் அனுமதியாம்

ஒவ்வொரு மாநிலத்திற்கும் 'குடிசைத் தொழில் மாதிரி' திட்டம் துவக்குவதற்கு மத்திய ஆட்சியினர் அனுமதித்துள்ளனர் என்று உ. பி. சட்டசபையில் துணைத் திட்ட அமைச்சர் அறிவித்துள்ளார்.

18,000 பவுண்டு 'டிஞ்சர்' விற்பனை செய்த டாக்டர்

10 ஆண்டுகள் தொழில் செய்யத் தடை

ரெய்பூர், செப். 17—

நோயாளிகள் அல்லாத இதரர்களுக்கு ஒருடாக்டர் சுமார் 18,000 பவுண்டு 'டிஞ்சர்' (குடி பொருளாக) விற்பனை செய்ததாக அதிகாரிகள் புகார் செய்ததின்பேரில் அவர் இன்னும் 10 ஆண்டுகளுக்கு 'டாக்டர்' தொழில் செய்யக் கூடாது என்று தடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது

தடுக்கப்பட்ட வகைகளில், இவர் விற்பனை செய்த 'டிஞ்சரு'ம் உள்ளதாம்; இவ்வளவு அளவு 'டிஞ்சர்' இவரால் கடந்த 1953-ம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டதாம்.

6,55,00,000 பேர் பணியாற்றுகின்றனர்!

அமெரிக்காவில் இன்று வேலை செய்வோர் தொகை 6,55,00,000.

இதற்கு முன்பு இவ்வளவு பேர் வேலை செய்ததில்லையாம்!

கோவாவுக்குள் நுழைவதற்குத் தடை!

அதிகாரிகளுக்கு பம்பாய்—சௌராஷ்டிர சர்க்கார் உத்திரவு

கோவா விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட, இந்திய சத்தியாக்கிரகிகள் கோவாவுக்குள் நுழைவதை அனுமதிப்பதில்லையென பம்பாய் சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

போர்ச்சுகீசிய எல்லைக்குள் தொண்டர்கள் நுழைவதைத் தடுத்து நிறுத்தும்படி எல்லைப் போலீஸ் அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்திரவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தனித்தனியாகவோ, குழுவாகவோ சென்றாலும் இனி அவர்கள் தடுக்கப்படுவர்.

சௌராஷ்டிர சர்க்காரும், இது போன்ற உத்திரவு ஒன்றை பிறப்பித்துள்ளனர்; சௌராஷ்டிரத்தின் கரையோரத்தில்தான் டையூ இருக்கிறது.

வடநாட்டு நதிப் படுகையில் தங்கம் கிடைக்கிறதாம்!

"கிழக்குப் பஞ்சாப் நதிப் படுகைகளில் சிறு அளவு தங்கம் கிடைப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது" என, இயற்கை வள மந்திரியின் சார்பில் கல்வி இலாகா உதவி மந்திரி டாக்டர் மாலி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

உ. பி. மாநில நதியோரங்களிலும் தங்கம் படிந்த மணல் காணப்படுவதாகவும் தகவல் கிடைத்திருக்கிறதாம், என்றாலும், 'இவையெல்லாம் பொருளாதார முக்கியத்துவம் பெற்றதல்ல' என்று சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

உத்தேசமில்லையாம்!

புதுடில்லி, செப். 7—

"ஜப்பானியரும் — இந்தியரும் கூட்டாகச் சேர்ந்து, இந்தியாவில் இரும்பு ஆலை அமைக்கும் உத்தேசம் எதுவுமில்லை" என்று, ராஜ்யங்கள் சபையில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அறிவித்துள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 8—9—'55 வியாழன்

'உறுதிமொழி'!

'இந்தி மொழியை வலுக்கட்டாயமாக, இந்தி பேசாத மக்கள் மீது திணிக்கமாட்டோம்,' என்று உறுதிமொழி தராத வடநாட்டுத் தலைவர்கள் இல்லை.

'இந்தி மொழி இந்தியாவின் அலுவல் மொழியே தவிர, இந்திய தேசிய மொழி அல்ல; இந்தியாவின் தேசிய மொழிகள்—அரசியல் சட்டப்படி—பதினன்கு வட்டார மொழிகளும்தான்,' என்று, இந்தி மொழி ஆதிக்கத்தை இந்தத் தென்னுட்டில் எதிர்ப்பவர்களைச் சமாதானப்படுத்த மாநில மந்திரிகள் தவறுவது கிடையாது.

" இந்தி மொழியை இந்தியாவின் ஆட்சி மொழியாக அரசியல் சட்டப்படி ஏற்றுக்கொண்டிருக்கிருேம்; அதற்குக் காரணம், 'இந்தி மொழி, வேறு வட்டார மொழிகளைவிட உயர்ந்தது—வளம் மிக்கது—தொன்மை வாய்ந்தது,' என்பதினுல் அல்ல—மாருக, இந்தி மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகமாயிருந்தது மட்டும்தான்; எனவே, அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டிருக்கிற இந்திய சர்க்கார் ஆட்சி மொழியை நாங்கள் கட்டாயப்படுத்தி, இதர மக்களை கற்றுக்கொள்ளச் சொல்லவில்லை—சொல்ல மாட்டோம்; ஆனல், அரசியல் சட்டத்தில் கூறியிருக்கிறபடி பதினைந்தாண்டுக் காலத்திற்குள் இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஆக்கிவிட வேண்டிய அவசியத்தை நீங்கள் உணர்வீர்கள்; எனவே, நீங்களாகவே கற்றுக்கொள்ளுங்கள்," என்று, பசப்பு மொழியில் வடநாட்டுத் தலைவர்கள் உபதேசம் செய்து வருகிருர்கள்.

அந்த உபதேசத்தை—பசப்பு மொழியை எடுத்துக்காட்டி, இந்த நாட்டு ஆட்சியில் அமர்ந்திருப்போர்—" பார்த்தீர்களா, 'இந்தி கட்டாயமில்லை' என்று அவர்கள் கூறுவதை; இந்தியைக் கட்டாயமாக நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை; நீங்கள் கட்டாயம் கற்றுத்தாளுக வேண்டும் என்று நிர்ப்பந்திக்க மாட்டோம்—உத்திரவிடமாட்டோம்; ஆனல், இந்தி மொழி—அரசியல் சட்டப்படி—இந்தியாவின் ஆட்சி மொழி என்பதை நீங்கள் மறந்துவிடலாகாது," என்று கூறி, இந்தியை, திராவிடரின் தேசியக் கண்ணேட்டத்தோடு எதிர்ப்பவர்களின் வாயை அடைக்க மனப்பால் குடிக்கின்றனர்.

'இந்தி கற்க வசதிகள் செய்து தருவோம்; இலவசமாக வகுப்புக்கள் நடத்துவோம்; சர்க்கார் ஊழியர்களுக்கு, அலுவல் நேரத்திலேயே ஒரு பகுதியை ஒதுக்கித் தருவோம்; இந்தி மொழி பரவ தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளுவோம்,' என்றும் வடநாட்டுத் தலைவர்களில் பலர் கூறிக்கொண்டிருக்கிருர்கள்.

'இந்தி மொழி தென்னுட்டில் எதிர்க்கப்படுகிறது; தென்னுட்டின்மீது வடவர் ஆதிக்கத்தை நிரந்தரமாக்கும்பொருட்டுத்தான் இந்தி மொழி புகுத்தப்படுகிறது என்று தென்னுட்டவர் கருதுகின்றனர்,' என்பதை வடநாட்டுத் தலைவர்கள் எல்லோரும் உணர்ந்திருக்கிருர்கள் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கிற வகையில் கூட, சில நேரங்களில் வடநாட்டவரது குரல் தொனிக்கிறது.

'இந்தி மொழிக்குத் தென்னுட்டில் எதிர்ப்பு இருக்கிறது; அதைத் தவிர்க்க வேண்டும்,' என்று நினைக்கிற வடநாட்டுத் தலைவர்கள், முதலில், திறந்த மனதுடன், தென்னுட்டில் இந்தி எதிர்க்கப்படுவதின் அடிப்படையைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

வடநாட்டுத் தலைவர்கள், தென்னுட்டில் தங்களுக்குக் கிடைத்திருக்கிற 'தொண்டர்'களும், அந்தத் 'தொண்டர் படை'யின் 'தலைவர்'களாக விளங்குகிற வடநாட்டுச் 'சேவா சிம்மங்'களும் இந்தி எதிர்ப்பாளர்களைப் பற்றித் தருகிற தவருன கணிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு தென்னுட்டில் இந்தி எதிர்ப்பின் அடிப்படையைத் தெரிந்து கொள்ள முயற்சிக்கக்கூடாது.

தென்னுட்டவர் - திராவிடர், இந்தி மொழி இங்கு பரப்பப்படுவதை — புகுத்தப்படுவதை எதிர்ப்பதற்குக் காரணம், தங்களின் வட்டார மொழிகள் பாதிக்கப்படும்— தாழ்வுறும்—தேயும் என்பதினுல் மட்டுமல்ல—'இந்தி மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கலாம்; ஆனல், இப்போதுள்ள 'இந்தியா' என்ற அரசியல் அமைப்பையே ஏற்றுக்கொள்ள திராவிடர்கள் மறுக்கும்போது, அந்த 'இந்தியா' என்ற அரசியல் அமைப்பின் இயக்கத்திற்காக என்று கூறிப் புகுத்தப்படும் இந்தி மொழியை ஏற்றுக்கொள்வது எதற்காக?' என்பதினுலும்தான்!

'வடக்கு வேறு—தெற்கு வேறு; வடவர் - இந்தோ-ஆரியர் வேறு—தென்னுட்டவர் - திராவிடர் வேறு' என்ற அடிப்படையில், தாங்கள் இழந்துவிட்ட சொந்த நாட்டு ஆதிபத்திய உரிமைக்காக—விடுதலைக்காகப் போராட திராவிடர்கள் முற்பட்டிருக்கும் போது, 'வடவரின் மொழியான இந்தி, இந்தியா முழுமைக்குமான மொழி என்பதை ஏற்றுக்கொள்ள இயலாதவர்களாயிருக்கின்றனர்,' என்பதை, 'இந்தி கட்டாயமில்லை' என்று உபதேசமும், உறுதிமொழியும் வழங்க முற்படும் வடவர் உணர்ந்தாக வேண்டும்.

'இந்தி கட்டாயமில்லை' என்ற 'உறுதி மொழி'யையும் வழங்கிவிட்டு, 'இரயில்வே நிலையத்தில் இந்தியில் 'போர்டு'—அஞ்சல் நிலைய முத்திரையிலும், அஞ்சல் சாதனங்களிலும் இந்தியில் பெயர்கள்—நாணயங்களில் இந்தியில் சொற்கள்—என்று ஏற்பாடுகளை அமுல்செய்வது போதாது என்பதுடன், '1956 ஜனவரி 25-ந் தேதிக்குள் இந்திய சர்க்காரின்கீழ் பணிபுரியும் ஊழியர்கள் இந்தி மொழி அறிவு பெற்ருக வேண்டும்,' என்று வேறு உத்தரவிட்டிருக்கின்றனர்—வடநாட்டு ஆதிபத்திய வாதிகள்!

'இந்தி மொழி அறிவு பெற்ருல்தான், இந்திய சர்க்கார் அலுவல் பார்க்க முடியும்,' என்பது, அந்த உத்தரவிலிருந்து பெறப்படும் பொருள்; ஆனலும், 'இந்தி கட்டாயமில்லை,' என்று கூறுகின்றனர்.

'இந்தி கற்றுத்தாளுகவேண்டும்,' என்று கூறமாட்டார்களாம்; ஆனல், 'இந்தி கற்ருல்தான் உத்தியோகம்' என்பது, 'இந்தி மொழி பேசாத பகுதியில் வாழ்வோர் இந்திய சர்க்கார் உத்தியோகம் பெற வேண்டுமானல், இந்தி கற்றுத்தாளுகவேண்டும்' என்று மறைமுகமாகக் கட்டாயப்படுத்தவில்லையா?

இப்படி விசித்திரமாக—முரண்பட நடந்துகொள்ளும் வடவர், 'உறுதிமொழி' தருவதினுல் என்ன பலன்? அந்த 'உறுதி மொழி'யை நம்புவதினுல்தான் என்ன பாதுகாப்பு கிடைக்க முடியும்?

இந்தியப் பேரரசின் ஏகாதிபத்தியப் போக்கினை நாம் உணர்ந்தவர்கள் என்பதால், அவர்கள் இந்தி பற்றி இப்போது மேற்கொண்டுள்ள இந்தப் புதிய உத்தரவுகள் போன்ற நடவடிக்கைகள் நாம் எதிர்பாராதவை அல்ல; அந்த நடவடிக்கையின் 'கோரவிளைவு'களை சீக்கிரமே வடவர் உணரத்தான் போகின்றனர்; திராவிடர்கள் உணர்த்தத்தான் போகின்றனர்!

மோட்டார் விபத்தில் 300 பேர் பலி!

அமெரிக்கத் 'தொழிலாளர் தின'த்தில்

நியூயார்க், செப். 5—

அமெரிக்கர்கள், இன்று, தேசிய விடுமுறை நாளாக 'தொழிலாளர் தினம்' கொண்டாடியிருக்கின்றனர்.

இத்தினத்தில் ஏற்பட்ட மோட்டார் விபத்துக்களினுல் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு இதே காலத்தில் இருந்ததைக் காட்டிலும் 35 சதவிகிதம் அதிகமாகி யிருப்பதாயும், கடந்த வார இறுதியுடன் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 300-க்கு எட்டியுள்ளதாயும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்கோடி பகுதியில் 'குட்டநாடு திட்டம்'

கடல் நீரைத் தடுப்பதால் ஏற்படும் பலன் பற்றி விளக்கம்

இந்தியாவின் தென்கோடி மாநிலமான திரு-கொச்சியில் குட்டநாடு பிரதேசத்தை ஒரு நெற்களஞ்சியமாக ஆக்குவதற்கு இப்போது திட்டமிடப்பட்டிருக்கிறது.

மேற்குக் கரை தீரத்தில் கொச்சித் துறைமுகத்திலிருந்து தெற்கே 40 மைல் தூரம் வியாபிக்கிற வேம்பனுட்டுக் காயலில் திருவாங்கூரின் ஐந்து பிரதான நதிகள் வந்து சங்கமமாகின்றன. மூவாற்றுப்புழை ஆறு, மீனச்சிலாறு, மணிமாலா நதி, பம்பா நதி, அச்சன் கோவிலாறு ஆகிய அந்நதிகளினிடையிலுள்ள டெல்டா பிரதேசம்தான், குட்டநாடு என்கிற பிரதேசம்.

சமதளமாகவும், நல்ல வளமாகவும் உள்ள இப்பிரதேசத்தின் பரப்பளவு 387 4 சதுர மைல்; இது, கடல் மட்டத்துக்கும் 2 அல்லது 3 அடி பள்ளமான பூமி; இங்கே, 189 2 சதுர அடி பரப்பளவில் நெல் வயல்கள் பரவிக் கிடக்கின்றன.

குட்டநாடு வண்டல் படிந்த வளமுள்ள பூமியாக இருந்தபோதிலும், இங்கே வாழும் மக்கள் செல்வச் செழிப்புள்ளவர்களாக இல்லை; இதற்குக் காரணம், இப்பூமியில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்வதற்கு வழியில்லாதிருப்பதுதான்.

பருவமழைக் காலத்தில் மேற்சொன்ன ஐந்து நதிகளும் வெள்ளப் பெருக்கெடுத்து ஏராளமான நீரை காயலில் கொண்டு சேர்க்கின்றன; அத்தண்ணீர் கடலில் கலப்பதற்கு ஒரே ஒரு வழி கொச்சி கழிமுகம்தாம்; அது மிகவும் குறுகலானது; எனவே வெள்ளப் பெருக்கினுல் பொங்கும் தண்ணீர், குட்டநாட்டில் பரவிவிடுகிறது. வருடத்தில் கணிசமான காலத்துக்கு இந்த மாதிரியாகக் குட்டநாடு வெள்ளத்தில் ஆழ்ந்துவிடுகிறது; எனவே, வண்டல் மிக்க அப்பூமியில் பிரசிரமப்பட்டு ஒரு போகம்தான் பயிரிட முடிகிறது.

மழையில்லாத கோடை காலத்தில் கடல் நீர் பொங்கிக் காயலுக்குள் புகுந்துவிடுவதால், குட்டநாட்டுப் பூமியில் உவர்க் கலப்பு ஏற்பட்டுவிடுகிறது; ஒரு போகப் பயிருக்கும் அதனுல் கேடு ஏற்படுகிறது; குடி தண்ணீருக்கும் கஷ்டமாகி விடுகிறது; பருவ மழைத் தண்ணீர் வந்தபின் உப்புச் சத்து மாறிவிடுகிறது.

இவ்வாறு கடலும், மழையும் மாறி மாறிப் பாதித்து வருகிற குட்டநாடு பிரதேசத்தில் தண்ணீர் பரவாமல் தடுத்து, அதை ஆண்டு முழுவதும் சாகுபடிக்கு இலாயக்குள்ளதாகவும், மக்கள் நிரந்தரமாக வாழக்கூடியதாகவும் ஆக்குவதற்கான திட்டம்தான், 'குட்ட நாடு திட்டம்'— முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கான விரிவான திட்டம் ஒன்று சேர்க்கப்பட்டது.

அத்திட்டத்தின் செலவு மதிப்பு ரூ 136 71 லட்சம்; அத்திட்டத்தில் மூன்று அம்சங்கள் அடங்கியிருக்கின்றன — முதல் அம்சம், பருவ மழையினுல் ஏற்படுகிற வெள்ளப் பெருக்கை நேரடியாகக் கடலில் சேர்ப்பது; அதற்குச் செலவு மதிப்பு ரூ. 57 23 லட்சம்.

ஆலப்புழையிலிருந்து சங்கனுச்சேரி வரையில் ஒரு பாதையும், அதற்கு இணைப்பாக படகுப் போக்குவரத்துக் கால்வாயும் அமைப்பதற்கான ஏற்பாடுதான் இரண்டாவது அம்சம்; அதற்குச் செலவு மதிப்பு ரூ. 35 9 லட்சம்

உப்புத் தண்ணீர் குட்டநாட்டுக்குள் புகாமல் தடுப்பதற்காகக் காயலுக்குக் குறுக்கே ஒரு அணைச் சுவர் கட்டுவதுதான் மூன்ருவது அம்சம்; அதற்கு ரூ. 43 58 லட்சம் செலவு பிடிக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

வெள்ளத் தண்ணீரை நேரடியாகக் கடலில் சேர்ப்பதற்காக ஆலப்புழையிலிருந்து 14 மைல் தெற்கேயுள்ள தொட்டப்பள்ளியில் ஒரு 'ரெகுலேட்டர்' பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடம் கடலிலிருந்து 3 000 அடி தூரம் உள்ளே தள்ளியிருக்கிறது; கடலையும், காயலையும் இணைக்கிற 4,300 அடி நீளமுள்ள கால்வாய்மீது அமைக்கப்பட்டிருக்கிறது; அப்பாலத்தில் 40 இடைப் பகுதிகள் (ஸ்பான்கள்) உள்ளன; ஒவ்வொன்றும் 25 அடி அகலமுள்ளது; ஒவ்வொரு பகுதியும் உருக்குக் கதவுள்ளது; கதவின் உயரம் $9\frac{1}{2}$ அடி.

பம்பாய்—குமரிமுனை 'தேசியப் பெருஞ் சாலை' இப்பாலத்தின் வழியாகவே செல்கிறது. நில மட்டத்துக்கு மேலே தண்ணீர் மட்டம் பொங்கிவிடாதபடி, இந்த ரெகுலேட்டர் பாலத்தின் வழியாக உச்ச பட்சம் 64,000 'க்யூசெக்ஸ்' தண்ணீர் பாயமுடியும்; இந்தப் பாலம் அமைக்கும் வேலை பூர்த்தியாகிவிட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

உலகம் அழிந்துவிடும்?

சூரியகோளம் சாம்பலாகும்?

டப்ளின், செப். 6—

" இன்னும் 100 கோடி ஆண்டுகளுக்குள் உலகம் அழிந்துவிடும்,"

என்ற கருத்தை, சர்வதேச வான ஆராய்ச்சி நிபுணர்கள் மாநாட்டில், அமெரிக்கக் குழுத் தலைவர் அறிவித்தாராம்.

இந்தக் கால அளவுக்குள், சூரிய கோளம், தன்னைத் தானே எரித்துக் கொண்டு சாம்பலாகிவிடக் கூடும் என்று வான ஆராய்ச்சி நிபுணர்கள் கணக்கிட்டு, இம்முடிவுக்கு வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டாராம்.

'சல்போன்' சிகிச்சை

குஷ்டரோகத்தைக் குணமாக்குகிறது!

'சல்போன்' என்ற சிகிச்சை முறையால் குஷ்டரோகம் குணமாவதுடன், தக்க பலனும் கிடைக்கிறதாம்.

வியாதியின் ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சை மேற்கொள்ளப்படுமானுல், அதிசயிக்கத்தக்க வகையில் குணம் காண முடியுமாம்.

மருந்தின் விலையும் மலிவானதாம்; ஆண்டிற்கு ரூ. 3–12–0-க்கு மேல் செலவாகாதாம்; இந்த வியாதியைக் கட்டுப்படுத்துவதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட முதல் மருந்து இதுதானும்!

பிரிட்டனில் நிறவெறி அதிகரித்து வருகிறது!

டாக்டர் கிளாரன்ஸ் தரும் எச்சரிக்கை!

லண்டன், செப். 5—

பிரிட்டனில் இன வேற்றுமை, நிறபேதக் கொடுமை நாளுக்கு நாள் வளர்ந்துவருவதாக டாக்டர் கிளாரன்ஸ் சீனியர் என்பார் தெரிவித்திருக்கிருர்.

நியூயார்க்கில் உள்ள போர்டோ ரீகோ தொழிலாளர் இலாகாவின் ஒரு பிரிவின் தலைவராயிருக்கும் டாக்டர் கிளாரன்ஸ், ஜமைக்கா தீவில் காலியிருக்கும் வேலைகளை நிரப்புவதற்காக, குடியேறியுள்ளவர்கள் பற்றி ஆராய்வதற்காக ஜமைக்கா சர்க்காரால் வரவழைக்கப்பட்டிருக்கிருர்.

கடந்த ஆறு மாதத்தில் 10 000 பேர்களுக்கும் அதிகமாக குடியேறியிருப்பதாகத் தெரிகிறது.

அங்கு சுமார் ஒரு இலட்சம் பேருக்கு வேலை காலி இருக்கிறதாம்.

" பிரிட்டனில் நிற வேற்றுமை அதிகரித்துக் கொண்டிருக்கிறது; நல்லெண்ணங் கொண்டோர் தீவிர முயற்சியில் ஈடுபட்டாலன்றி, இன்னும் சில காலத்தில் இந்த வேற்றுமை இன்னும் அதிகம் வளர்ந்தே தீரும்,"

என்று, டாக்டர் கிளாரன்ஸ் கூறியிருக்கிருர்.

தங்கள் விடுதிகளில் பணிபுரிய ஆட்களுக்குப் பஞ்சமாயிருப்பதால், பிரிட்டிஷ் உணவு விடுதிக்காரர்கள், வெள்ளையரல்லாதாரை வேலைக்கு அமர்த்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்த நிர்ணயிக்கப்பட்ட திட்டங்கள்

மாநிலவாரியாக ஒரு கண்ணோட்டம்

இந்தியாவில் சாகுபடிக்கு ஏற்றதாயுள்ள எல்லா நிலங்களையும் முழுவதுமாகப் பயன்படுத்தி, உச்ச அளவில் விளைபொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தித் தருவதே சர்க்கார் வகுத்துள்ள அபிவிருத்தித் திட்டங்களின் நோக்கமாகும்.

பிரம்மாண்டமான அணைக் கட்டுத் திட்டங்கள், சிறிய தேக்கங்கள், அணைகள், ஏரி, குளம், கிணறு, குழாய்க் கிணறு, கால்வாய் முதலிய சிறிய பாசனத் திட்டங்கள் எல்லாம் இந்நோக்கம் நிறைவேறுவதற்காக வகுக்கப்பட்டவைதான்.

சிறிய திட்டங்களின் புள்ளி விவரம் கீழே தரப்படுகிறது:—

ரூ 5 கோடிக்கு அதிகமாகச் செலவு பிடிக்கும் திட்டங்கள் ...	13
ரூ. 3 கோடி முதல் ரூ. 5 - கோடி வரை பிடிக்கும் திட்டங்கள் ...	19
ரூ. 50 லட்சம் முதல் ரூ. 1 - கோடிவரை பிடிப்பவை ...	20
ரூ. 10 லட்சம் முதல் ரூ 50 லட்சம் வரை பிடிப்பவை ...	42

நடைமுதல் ஐந்தாண்டுத் திட்டப்படி வகுக்கப்பட்டிருக்கும் பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள் மூலம் 1956 மார்ச் வரையில் அதிகப்படியாக 70 இலட்சம் ஏகரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும் என்றும், அடுத்த திட்டகாலமான 1961-க்குள் மேலும் 90 இலட்சம் ஏகராவுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்றும், அதற்குப் பிறகு 70 இலட்சம் ஏகராவுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது அதிகப்படியாக மொத்தம் 230 இலட்சம் ஏகராவுக்குப் பாசன வசதி கிடைக்கும். சிறிய பாசனத் திட்டங்கள் மூலம் நடைமுதல் திட்ட காலத்துக்குள் அதிகப்படியாய் 112 இலட்சம் ஏகரா நிலத்துக்கு நீர் வசதி கிடைக்குமென்று இலட்சிய வரம்பு விதித்ததற்கு, காரியாம்சத்தில் 90 இலட்சம் ஏகரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்குமென்று தெரிய வருகிறது.

சென்னை மாநிலத்தில் நதிகளின் தண்ணீர் வசதியை எல்லாம் எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு அதிகமாகப் பயன்படுத்த ஏற்கனவே திட்டமிட்டு வேலை நடந்து வந்திருக்கிறது; நடைமுதல் திட்டத்தில் பிரதானமானவை கீழ் பவானி, மாலம்புழா, கிருஷ்ணகிரி திட்டங்களாகும்.

பவானி திட்டம் நிறைவேறிவிட்டது; மணிமுத்தாறு திட்டம், மேட்டூர் கால்வாய்த் திட்டம், மாலம்புழா திட்டம் ஆகியவை சம்பந்தமான வேலை நடந்தேறிவருகிறது; '1954 செப்டம்பருக்குள் 3,24,000 ஏகரா நிலத்துக்குப் பாசன வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்' என்று லட்சிய வரம்பு விதிக்கப்பட்டது; 1,85,800 ஏகரா நிலத்துக்கு ஏற்கனவே பாசன வசதி கிடைக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது.

ஆந்திராவில் துங்கபத்திரா திட்டம் பிரதான திட்டமாக இருந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது 1954-ல் கிருஷ்ணா அணைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது; அதற்கான செலவு மதிப்பு ரூ 234 லட்சம்; பற்றுக்குறைப் பிரதேச அபிவிருத்தித் திட்டமாக கர்னூல்-கடப்பை கால்வாய்த் திட்டம் நடத்தப்படவிருக்கிறது.

மைசூரில் பத்து பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவைகளில் பத்திரை தேக்கம், துங்க அணைக்கட்டு, நூகு தேக்கம் ஆகியவை விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை.

ரூ 2.3 கோடி செலவில் 21,000 ஏகராவுக்குப் பாசன வசதி ஏற்படுத்தும் அணைத் திட்டம் துங்க திட்டம். அந்த அணை கட்டுமான அணை; அதன் உயரம் 40 அடி; வேலை நடந்துவருகிறது; 1954-ல் 5,600 ஏகரா நிலத்துக்குத் தண்ணீர் விடப்பட்டது.

நூகு திட்டத்துக்கு ரூ 2.43 கோடி செலவாகும்; அதனால், 20,000 ஏகரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும். அந்த அணை—மண் அணையும், கட்டுமான அணையும் சேர்ந்தது; அதன் உயரம் 110 அடி; பிரதான கட்டுமான அணை வேலையும், மண் அணை சம்பந்தமான பெரும் பகுதி வேலையும் 1954 ஜனவரியிலேயே முடிவடைந்துவிட்டது.

ஐதராபாத் மாநிலத்தில் மொத்தம் 13 பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. துங்கபத்திரா திட்டம்தான் இங்கு பிரதான திட்டமாகும்; அது ஏறக்குறைய முடிவடைந்துவிட்டது. கோதாவரி முதல் கட்டம், சாரலா சாகர், கோயில் சாகர் ஆகியவை இதர முக்கிய திட்டங்கள் ஆகும். கோதாவரி முதல் கட்ட திட்டத்துக்கு ரூ 4.11 கோடி செலவாகும்; அதற்காக ஒரு அணையும், 48 மைல் நீளக் கால்வாயும் அமைக்க வேண்டும். அதனால் 67,000 ஏகரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்.

பீகாரில் திரிவேணி கால்வாய்த் திட்டம் பிரதானமானது; அது தவிர, குழாய்க் கிணறுத் திட்டங்களும் இதர பல திட்டங்களும் உள்ளன. முதல் திட்ட காலத்துக்குள் 7,50,000 ஏகரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்படி செய்ய ஏற்பாடாகியிருக்கிறது.

பம்பாயில் 20 பாசனத் திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கங்காப்பூர், ரேகாந்த், மாகி வலது கரைக் கால்வாய், கட்டபிரபா இடது கரைக் கால்வாய்த் திட்டம், கக்ரபார் ஆகிய திட்டங்களை அவைகளில் முக்கியமானவை என்று குறிப்பிடலாம்.

கோதாவரி இடது கரையில் 140 அடி உயரத்துக்கும், 12,500 அடி நீளத்துக்கும் அணை கட்டும் திட்டம்தான் கங்காப்பூர் திட்டம்; இதற்கு ரூ 3.34 கோடி செலவாகும்; அதனால் 45,000 ஏகராவுக்குப் பாசன வசதி கிடைக்கும்.

உத்தரப் பிரதேசத்தில் குழாய்க் கிணறு திட்டங்கள் தவிர, சந்திரபிரபா, மததிலா, ரௌகார், லலித்பூர், பேலான் டான்ஸ் கால்வாய் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மததிலா அணையின் முதல் கட்ட வேலை 1956-ல் பூர்த்தியாகும்; அதற்கு ரூ. 4.88 கோடி செலவாகும்; இரண்டாவது கட்டத்துக்கு ரூ. 3.11 கோடி பிடிக்கும். 2.64 லட்சம் ஏகரா நிலம் இதனால் பாசன வசதி பெறும். சந்திரபிரபா திட்டத்தால் 24,000 ஏகரா நிலத்துக்கும், ரௌகார் திட்டத்தால் 70,068 ஏகரா நிலத்துக்கும் பாசன வசதி கிட்டும்.

மிகப் பெரிய பக்ரா—நங்கல் திட்டம் பஞ்சாபின் பிரதான திட்டமாகும்; இது தவிர, குழாய்க் கிணறுகள் திட்டமும், சிறிய பாசன வசதித் திட்டங்களும் அங்கே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஹிராகுட் அணைத் திட்டம் ஒரிசாவின் பிரதானத் திட்டமாகும்; அந்த மாநிலத்தில் இந்த ஒரு திட்டம்தான் நடைபெற்றுவருகிறது.

மேற்கு வங்காளத்தில் தாமோதர் பள்ளத்தாக்கு அபிவிருத்திக் கார்ப்பரேஷன் திட்டமும், மயூராட்சி திட்டமும் முக்கிய திட்டங்கள்.

மத்திய பாரத்தில் சம்பல் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் பிரதான திட்டமாகும். அது பாசனம், மின்சார உற்பத்தி, வெள்ளத் தடை ஆகிய பல காரியங்களையும் உத்தேசித்து மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டமாகும்; மத்திய பாரத், இராஜஸ்தான் ஆகிய பிரதேசங்கள் இதனால் பலனடையும். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள காந்தி சாகர் அணை 1961—62-ல் பூர்த்தியாகும்; அனால் 1958-59-லேயே அதன் மூலம் ஓரளவு நன்மை கிடைக்கத் துவங்கிவிடும்

செய்திச் சுருள்

★

அண்ணா சொற்பயிற்சி மன்றம்

2—9—55 மாலை 6 மணிக்கு, நாஞ்சில் மாவட்டம், நாகர்கோவில் வடசேரியிலுள்ள மேற்படி மன்றத்தின் முதல் சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் சு. வன்னியப்பெருமான் தலைமையில் நடைபெற்றது. 'மேடைப்பேச்சு' எனும் பொருள் பற்றித் தோழர் வை. சுப்பிரமணியன் விளக்கமாக எடுத்தியம்பினார். அதனை அடிப்படுத்தித் தோழர்கள் எம். கணபதி, பி இராமச்சந்திரன், எஸ். சுந்தரம், எஸ். நடராசன், எஸ். தங்கப்பன், பி. டி. செல்லத்துரை, எஸ் இர்வின் சிங், ச. கிருஷ்ணன், வி. எம். ஜான் ஆகியோர் தங்கள் கருத்துரைகளை வழங்கினர் தலைவர் முடிவுரையில், மேடைப் பேச்சின் தன்மை, அதில் வெற்றிபெறும் வழிவகைகள், அதன் தேவை என்பது பற்றித் தெளிவாக எடுத்துக் கூறினார்.

9—9—55 மாலை 6 மணிக்கு, மேற்படி மன்ற அலுவலகத்தில் (வடசேரி தி மு. க.) நடைபெறும் சொற்பயிற்சிக் கூட்டத்தில், 'தமிழின் பெருமை' என்பது குறித்து பல தோழர்கள் பேசுவர்.

அறிவியக்க மன்றம் அமைப்பு

3—9—55 மாலை 7 மணிக்கு சென்னை 27-வது வட்டம் அனுமந்தராயன் கோயில் தெரு, எண். 32-ல் அறிவியக்க மன்றத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் ஆ. இரா. திங்கள் தலைமையில், பி. ஆர். ஸ்கொயர் பார்க்கில் நடைபெற்ற திறப்பு விழாக் கூட்டத்தில், மேற்படி மன்றத்தைத் தோழர் ஆ ருக்மாங்கதன் திறந்து வைத்து, மன்றத்தின் அவசியம் குறித்துப் பேசினார். மற்றும் தோழர்கள் மு. வச்சிரவேலு, ஆ. தனபால், அன்புமணி ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்

திருமணம்

4—9—55 காலை 9 மணி அளவில், பெரியகுளம் தி. மு கழகத்

கோவா படுகொலை: தமிழகமெங்கும் கண்டனம்

கோவாவில் அறப்போர் தொண்டர்கள் மீது போர்ச்சுகீசியர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தைக் கண்டித்து தமிழகத்தில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடைபெற்று, கண்டனத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; அவை இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன:—

வத்திராயிருப்பு

26—8—55-ல் வத்திராயிருப்பு நகர் முழுவதும் பூரண வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. அன்று மாலை சர்வ கட்சிகளும் அடங்கிய ஊர்வலம் நடைபெற்றதுடன், முக்காலையம்மன் சாவடி மைதானத்தில், திரு என். எஸ். நல்லுசாமி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பல கட்சிகளின் சார்பில் தோழர்கள் சொற்பொழிவாற்றினர். தோழர் பி. பாண்டியன் தி. மு கழகச் சார்பில் சொற்பொழிவாற்றினார். கூட்டத்தின்போது, போராட்டத்தில் உயிர் துறந்த தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் மௌனம் மேற்கொள்ளப்பட்டது. பின்னர், கோவா ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறையை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோழர் மு. செல்லையா—தோழியர் மீனாட்சி திருமணம் தோழர் எஸ். பி. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் எம். கே. ஆறுமுகம், பி. பாண்டியன், ஆர். வெற்றிச்செல்வன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக, 'நம் நாடு' இதழுக்கு மணமக்கள் சார்பில் ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

உங்கள் குறிப்புக்கு

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தியாவில் வெளிநாடுகளுக்குச் சொந்தமாகவோ, அவற்றின் கட்டுப்பாட்டின் கீழோ இருந்த 1,208 கம்பெனிகளில், மாதத்துக்கு ஆயிரம் ரூபாயும், அதற்கு மேற்பட்டும் சம்பளம் உள்ள பிரிவைச் சேர்ந்த தொழில் நுட்பப் பதவிகளில், மொத்தம் 1,543 இந்தியர்களும், இந்தியர் அல்லாதவர்கள் 2,779 பேரும் வேலை பார்த்துவந்தனர்; இதே சம்பளமுள்ள இதர பதவிகளில் மொத்தம் 2,324 இந்தியர்களும், இந்தியர் அல்லாதவர்கள் 3,751 பேரும் வேலை பார்த்துவந்தனர்.

சின்னாளபட்டி

நகர தி.மு. கழகம், கம்யூனிஸ்டு, பிரஜா-சோஷலிஸ்டு, நகர தொழிற் சங்கங்கள் ஆகியவை சார்பில் 26—8—55ல் நகரில் கடையடைப்பு செய்யப்பட்டது. காங்கிரசார் கடையடைப்பு செய்ய மறுத்தனர். மாலை 5 மணிக்கு, ஊர்வலம் நடைபெற்றது. வள்ளுவர் திடலில் 7 மணிக்கு, தோழர் ஏ எம். டி. நாச்சியப்பன் தலைமையில் தோழர்கள் வெள்ளைச்சாமி, முத்துக்கிருஷ்ணன், ச. லோகநாதன், சென்னையா, வடிவேல், இராமச்சந்திரன் ஆகியோர் பேசினர். பின்னர் உயிர்துறந்த தியாகிகளுக்கு வணக்கம் செலுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

போத்தனூர்

28—8—55 மாலை 4 மணிக்கு, சகல கட்சியினரும் ஒன்றுசேர்ந்து, போர்ச்சுகீசியக் கொடும்பாவியுடன் ஊர்வலம் நடத்தினர். எங்கும் கடையடைப்பு செய்யப்பட்டது. நூருபாத் மைதானத்தில், போர்ச்சுகீசிய கொடும்பாவி சுட்டெரிக்கப்பட்ட பின்னர், திரு. கந்தசாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் பா. ச. சின்னதுரை, எம் பூபதி, மாரிமுத்து, மணி, சதாசிவம், முருகேசன், ஆர். முனியப்பன், கே. இராமசாமி, என். முருகேசன், கே. ஆர். இராமசாமி, கோவிந்த மேனன் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர். பின்னர், கோவா கண்டன, அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டுக்கல்

20—8—55ல், நகர் முழுமையிலும் கடைகள் அடைக்கப்பெற்றிருந்தன; அன்று மாலை திரு. கே. கணேசன் தலைமையில் சர்வ கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தங்கராசன், பி. சமதர்மம், முத்துலக்கையன், மற்றும் தோழர்களும் சொற்பொழிவாற்றினர். கோவா கண்டன, அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஏனங்குடி

27—8—55 மாலை 4 மணி அளவில் சர்வகட்சியினரும் அடங்கிய ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் மாலை 5½ மணிக்கு திரு. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் என். சௌரிராசன், எம். ஏ. சம்சுதீன், க. கு. கோவிந்தசாமி, முத்துக்கிருட்டிணன், மா. சம்பந்தம், சா. குருமூர்த்தி மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், தோழர்கள் முத்துக்குமரசாமி, க. கு. கோவிந்தசாமி, எஸ். சுந்திரம், சம்சுதீன், மா. சம்பந்தம் ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட கோவா விடுதலைப் போராட்டக் குழு நியமிக்கப்பட்ட பின், அகில இந்திய கோவா விடுதலைக் குழுவிற்கு நிதியும் அனுப்பப்பட்டது.

எரியோடு (திண்டுக்கல் வட்டம்)

26-8-55-ல், ஊரில் உள்ள எல்லாக் கடைகளும், உணவு விடுதிகளும், பள்ளிகளும் மூடப்பட்டு, பள்ளி மாணவர்கள் உட்பட சர்வ கட்சியின் சார்பில், காலை 10 மணிக்கு ஊர்வலம் நடைபெற்றது. அன்று மாலை 6 மணி அளவில் திரு ஜி. பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் மணிவேலன், சே வெள்ளைச்சாமி, சே. வீ. சாமி, முனியப்பன் ஆகியோர் போர்ச்சுகீசியரின் வெறிச் செயலைக் கண்டித்துப் பேசினர். கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

* * * * * * * * * * * * * * * * *

தலைமைக் கழகம்: அறிக்கை—27/55

தி. மு. கழக ஆண்டு விழாவும்—நாட்டுப் பிரிவினை வாரமும்

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றங்கொண்டு, ஆறு ஆண்டுகளைக் கடந்து, ஏழாவது ஆண்டில் அடி எடுத்துவைக்கும் பெருமைகொள் விழா 17—9—55-ஆம் நாளன்று நடைபெறவிருக்கிறது.

17—9—55-ஆம் நாளிலிருந்து 23—9—55-ஆம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தைத் திராவிட நாடு பிரிவினை வாரமாகக்கொண்டு, தி. மு. கழக ஆண்டு விழாவை மிகச் சீரிய முறையில், ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளும், தி. மு. கழகத்திற்குச் சார்புடைய அமைப்புகளும் கொண்டாடுவனவாக!

தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், கழகம் ஆற்றிய தொண்டுகளை எடுத்துக்கூறியும், திராவிட நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை வலியுறுத்திச் சொல்லியும் துண்டு அறிக்கைகள் வெளியிட்டு—தட்டிகள் எழுதி வைத்து—ஊர்வலங்கள் நடத்தி—பொதுக்கூட்டங்கள் கூட்டிக் கழகத் தோழர்கள் கொண்டாடுவார்களாக!

இயன்றுல் கொள்கை விளக்க இசையரங்குகளும்—நாடகங்களும் இலவசமாக நடத்திக்காட்டுவார்களாக!

'அறிவகம்', சென்னை-13
27—8—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

* * * * * * * * * * * * * * * * *

சட்டக் கல்லூரியில் அண்ணாதுரை

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

வேறு ஒரு அலுவலகத்திற்கு எழுதப்பட்ட கடிதம், சுத்தத் தமிழ் மொழியில் இருந்ததால், கடிதம், போய்ச்சேரவேண்டிய இடத்திற்குச் செல்லாமல், பட்டுவாடா செய்ய முடியாத அஞ்சல் நிலைய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது,' என்று தெரிவித்திருக்கிறார்;

" சுத்தத் தமிழில் எழுதப்பட்ட ஒரு கடிதம், சேரவேண்டிய இடத்திற்குப் போய்சேரவில்லை என்பதாலேயே, தமிழ் மொழியில் அலுவல்கள் நடைபெற முடியாதென்பதல்ல; ஒரு மாவட்டத்தில் உள்ள அலுவலகங்களில் தமிழ் மொழியை அலுவல் மொழியாக ஆக்கிய சர்க்கார், அந்த மாவட்ட அலுவலகங்கள் தொடர்பு கொள்ளுகிற எல்லா அதிகாரிகளுக்கும், அலுவலகங்களுக்கும், தமிழ் மொழி அலுவல் நடைமுறை குறித்து போதுமான விளக்கம் தர ஏற்பாடு செய்யவேண்டிய பொறுப்பை ஏற்றிருக்கவேண்டும்; அதை விட்டுவிட்டு, ' தமிழ் மொழியில் எழுதப்பட்ட கடிதம் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேரவில்லை' என்ற சாக்குக் கூறி, ' தமிழ் மொழியில் அலுவல் நடத்தும் முறை வெற்றி பெறவில்லை' என்று கூறுவது, பொருத்தமாகாது;

" தமிழ் மொழி இன்று, ஆட்சி மொழியாக இருக்கவில்லை; ஆலயங்களில் ஆண்டவனுக்குப் பிரார்த்தனை தமிழ் மொழியில் நடைபெறவில்லை; அற மன்றங்களில், மருத்துவ விடுதிகளில், பொது அலுவலகங்களில், சடங்குகளில், சட்ட மன்றங்களில் தமிழ் மொழி இடம் பெற்றிருக்கவில்லை;

" ஆலயங்களில் தமிழ் மொழியில் அர்ச்சனை நடைபெற வேண்டும்—என்று பக்தர்கள் கோருகின்றனர்; ஆனால், 'ஆண்டவனுக்குத் தமிழ் மொழியில் அர்ச்சித்தால் புரியாது' என்று கூறி, ஆண்டவனையே குறைத்துக்கூற முற்படுபவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர்; அர்ச்சனையும், சடங்குகளும் இன்று சவ மொழியிலேயே நடைபெறுகின்றன; தொடர்ந்து சவ மொழியிலேயே நடைபெற்றுவரவும் கூடும்; ஏனெனில், 'அந்த மொழிதான் சிறந்த மொழி' என்று கூறுகின்றனர்;

" ஆண்டவனை பூஜிக்கவோ, அல்லது சடங்குகளை நடத்தவோ, அல்லது ஆட்சி மொழியாக வீற்றிருக்கவோ சவமொழி சிறந்ததா—தமிழ் மொழி சிறந்ததா—என்பதை நான் இங்கு பேசிக் கொண்டிருக்கப்போவதில்லை; நீங்களும் எடை போட்டுப் பார்க்க வேண்டும் என்று கேட்கப்போவதில்லை; 'எந்த மொழி சிறந்தது' என்பதை, காலம் எடைபோட்டுச் சொல்லவிருக்கிறது; காலத்தின் அந்த முடிவுக்காக, கண்ணியவான்கள் காத்துக் கிடக்கின்றனர்;

" ஆனால், நமது தாய் மொழி, அதற்குரிய இடத்தை ஆட்சியிலும், சட்ட மன்றத்திலும், நீதி மன்றத்திலும், இன்ன பிற இடங்களிலும், எல்லாத் துறைகளிலும் பெறுவதற்கான முயற்சியில், பட்டம் பெற்று கல்லூரிகளை விட்டு வெளியேறி விட்ட பிறகேனும் மாணவர்கள் பெரு முயற்சி செய்ய வேண்டும்;

" இன்று தமிழ் நாட்டில், ஒருபுறம் இந்தத் தமிழ் உணர்வு கொழுந்துவிட்டெரிகிறது; தமிழ் மொழியில் அழகுறப் பேசும் சொற்பொழிவாளர்கள் திறம்பட—நயம்பட எழுதும் எழுத்தாளர்கள், உணர்ச்சியும்—பொருளும் மிகுந்த கவிதை இயற்றும் கவிஞர்கள் இருக்கிறார்கள்; நாள்தோறும் தமிழ் வளர்ச்சிக்குப் பல வழியிலும் பாடுபடுவோர் தொகை ஓர் புறம் வளர்ந்து கொண்டேயிருக்கிறது;

" ஆனால், மற்றோர்புறத்தில், தமிழ் மொழியின் தொன்மையை—மென்மையை—வளமையை—சிறப்பை மறுக்காமல், எதிர்க்காமல் வேறு ஒரு மொழிமீது தழுவல் நடத்துகிறார்கள்—தமிழை நழுவவிடுகிறார்கள்;

" ஆட்சிபீடத்திலிருப்போர் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு; 'தமிழ் எல்லா வகையாலும் சிறந்தது' என்று ஒப்புக்கொள்ளுகின்றனர்; ஆனால், தமிழ் மொழிக்கு உரிய இடம் தராது, வேறு ஒரு மொழியின் வளர்ச்சிக்கு அக்கரை காட்ட முற்படுகின்றனர்;

" நல்லது ஒன்றை நம்மிடம் வைத்துக்கொண்டு மற்றொன்றைத் தழுவுவது, நம்மிடமிருப்பதை நழுவவிடுவதாகத்தான் முடியும்; எனவே, மாணவர்கள் பொதுவாக நாட்டில் தமிழ் மொழி ஏற்றமும், இடமும் பெற்றில்லாததை மனதில் கொண்டு, தங்கள் காலத்திலேயே தாய் மொழிக்கு உரிய இடம் தேடித்தர முனைய வேண்டும்,"

—என்று, தோழர் அண்ணாதுரை அவர்கள், சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துவக்க விழாவில் சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

[அவரது சொற்பொழிவு முடியவில்லை நாளை தொடர்ந்து வெளிவரும்.]

★

நிகழ்ச்சி

சட்டக்கல்லூரி தமிழ் மன்றத் துவக்க விழா 7—9—55 புதன் மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

விழாவிற்கு மாணவர் தலைவர் ஞானசம்பந்தன் தலைமை வகித்தார்.

ஆசிரியத் தலைவர் கோபால கிருஷ்ணன் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

' பிரசண்ட விகடன் ' ஆசிரியர் தோழர் நாரண-துரைக்கண்ணன் அவர்கள் தமிழ் மன்றத்தைத் துவக்கிவைத்துப் பேசினார்.

தோழர் சி. என். அண்ணாதுரை விழாவில் அரியதோர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

பின்னர், மன்றச் செயலாளர் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட சட்டக் கல்லூரி மாணவர்களும், ஏராளமான தோழர்களும் கலந்துகொண்டனர். (ந-நி.)

15,000 ரூபிள்கள் பரிசு

மக்கள் மனதில் பதியும்படி மத நம்பிக்கையை எதிர்த்து புத்தக ரூபத்தில் 30 பக்கங்கள் எழுதுவோருக்கு 15,000 ரூபிள்கள் பரிசளிக்க ரஷ்ய கல்வி இலாகாவினர் முன்வந்துள்ளனராம்.

'அதிகார எல்லை'யில் சுய ஆட்சியாம்!

திட்டத்தை ஏற்க மறுப்பு

பிரிட்டிஷ் ஆட்சியின் அதிகாரத்தின்கீழ், சைப்ரஸ் காலனிக்கு பெரும் அளவில் சுயாட்சி வழங்கும் அரசியல் சீர்திருத்தங்களுக்கு பிரிட்டன் தயாராக இருப்பதாக கிரீஸ், துருக்கி, பிரிட்டன் அடங்கிய மூக்கூட்டு மாநாட்டில், பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாகா அமைச்சர் அறிவித்தாராம்; ஆனால், திட்டத்தின் விவரங்களை அவர் அறிவிக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சைப்ரசுக்கு சுயநிர்ணய உரிமை அளிக்கப்படவில்லை என்ற காரணத்தால், பிரிட்டிஷ் திட்டத்தை கிரீஸ் நிராகரிக்குமாம்.

நான்கு இலட்சம் கிரேக்கர்களுடன், மைனாரிட்டியாக உள்ள ஒரு இலட்சம் துருக்கியருக்குச் சமஉரிமை அளிக்கப்படவில்லை என்ற திட்டத்தால், பிரிட்டிஷ் திட்டத்தை துருக்கியும் நிராகரித்து விடுமாம்.

இதனிடையே, பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்தும், கிரீசுடன் சைப்ரசின் இணைப்பை வற்புறுத்தியும் நடைபெற்று வரும் பயங்கர இயக்கத்தை ஒடுக்குவதற்கு சர்க்கார் முற்பட்டுள்ளனர்.

கிரீசின் தலைநகரான நிகோசியாவில் ஊரடங்குச் சட்டம் பிரகடனமாகியுள்ளது; வீடு வீடாகச் சென்று, துருப்புகள் சோதனையிடுகின்றன; பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டு தலைமறைவாகியுள்ளவர்களைக் கைது செய்வதும், கள்ள ஆயுதங்களைக் கைப்பற்றுவதும் இதன் நோக்கமாகுமாம்.

★

துருக்கியில் கிரேக்கர் எதிர்ப்பு கலவரம்

இராணுவச் சட்டம் பிரகடனம்

இஸ்தான்புல், செப். 6—

'சைப்ரஸ் துருக்கியைச் சேர்ந்ததே' என்று முழக்கமிட்டுக் கொண்டு, துருக்கியில் இஸ்தான்புல் நகரிலும், இஜ்மீர் நகரிலும் ஆயிரக்கணக்கானபேர்கள் கிரேக்க எதிர்ப்பு கலவரத்தில் ஈடுபட்டனராம்; கிரேக்கரின் கடைகளும், வீடுகளும் தாக்கப்பட்டனவாம்.

இதன் விளைவாக இஸ்தான்புல் அங்காரா, இஜ்மீர் ஆகிய இடங்களில் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாம்.

பேச்சுவார்த்தை நிறுத்தம்

சைப்ரஸ் சம்பந்தமாக நடைபெற்று வந்த முக்கூட்டுப் பேச்சுவார்த்தை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நெல்லை மாவட்டம் மாநில மாநாட்டு நிதி

நெல்லைமாவட்டத்தில் அண்ணா அவர்கள் சுற்றுப்பயணம் செய்த சமயம், கோவில்பட்டி, சங்கரன்கோவில் பொதுக் கூட்டங்களில் கொடுக்கப்பட்ட காலணா முடிப்பும், மாலையும் சேர்ந்து ரூ. 2-9-3-ம், தூத்துக்குடி பொதுக்கூட்டத்தில் பழைய மார்க்கெட் வர்த்தகர்கள் சார்பில் 101 அணா கொண்ட முடிப்பு—ரூ. 6—5—0-ம், ஆக மொத்தம் ரூ. 8—14—3-ம் மாநில மாநாட்டு நிதிக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்ட தி.மு.கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அவர்களிடமிருந்து, கிளைக் கழகங்கள் கொடுத்த நிதி விபரமும், நிதி வசூல் பாக்கித் தொகையும் வந்து சேர்ந்ததும், 'நம் நாடு' இதழில் விபரம் வெளி வரும்.

பொறுப்பாளர்,
தி. மு. கழக தலைமை நிலையம்

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் இராசீபுரம் வருகை

11—9—55 காலை 9 மணிக்கு, இராசீபுரம் தி. மு. கழகச் சார்பில், மாநில மாநாட்டு நிதிக்காக, ரங்க விலாஸ் தியேட்டரில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் பேசுவர்.

மாலை 3 மணிக்கு, இராசீபுரம் நகராட்சி மன்றம், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும்.

மாலை 6 மணிக்கு, இராசீபுரம் புதுச்சந்தைப்பேட்டையில், தோழர் பி. ராமலிங்கம் தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு-பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

* * *

பாலக்கோடு வருகை

12—9—55 மாலை 6 மணிக்கு, பாலக்கோடு, பெத்தம்பட்டி. தி. மு. கழகக் கிளைகளின் சார்பில், பாலக்கோடு ஸ்தூபி மைதானத்தில், தோழர் பி.எம். குப்புசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சேலம் மாவட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

செப். 11: இராசீபுரம்
12: பாலக்கோடு
13: அரூர்

பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியனுக்கு வரவேற்பு

இராசீபுரம் நகராட்சி மன்ற முடிவு

11—9—55 ந் தேதியன்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இராசீபுரத்திற்கு வருகை தரும்போது, இராசீபுரம் நகர மன்றச் சார்பில் அவருக்கு வரவேற்பு தருவதென்று, மேற்படி நகரசபைத் தலைவர் திரு ஜி கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நகரமன்ற விசேடக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பொதுச்செயலாளர் வரவேற்பிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கத் தோழர்கள் கே. என். இராதாகிருஷ்ணன், ஈ ஆர். ஏ. இராமலிங்கம், கே. ஏ. சி. அர்த்தனாரி, பி. எஸ். பழனிசாமி ஆகியோரடங்கிய குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

சீக்கியத் தலைவர்கள்— குடியரசுத் தலைவர் சந்திப்பு

புதுடில்லி, செப். 6—

சர்தார் உக்கும் சிங். கியானி பிரதாப் சிங் என்ற இரு அகாலி தலைவர்களும், தங்களின் பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கை பற்றியும், உத்தியோகங்களுக்கு சீக்கியர்களை நியமிப்பது குறித்தும் தங்களுக்குள்ள குறைகளை முறையிடுவதற்காகக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரப் பிரசாதை நேற்று சந்தித்தனர் என்று கூறப்படுகிறது.

அவர்கள் உள்நாட்டு மந்திரி பண்டித பந்தையும் இதே காரணத்திற்காக அன்று காலையில் சந்தித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை (மயிலை)

கோபதி நாராயணசாமி செட்டித் தெரு திடலில்
9—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்:
முகவை ஆர். எஸ். பாண்டியன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
என். வி. நடராசன்

★

கொப்பம்பட்டி

தேர் நிறுத்தத் திடலில்
10—9—55 மாலை 6½ மணிக்கு
தலைவர்: டி. கே. பி. சாமி
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
ஜி. பராங்குசம்

சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கட்கு

10—9—55 சனிக்கிழமை இரவு 9 மணிக்கு, சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், 13-வது வட்டம் கல்லாங்குத்து கிளையில் நடைபெறும். அதுசமயம் திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாடுவது, மற்றும் பல பொருட்கள் குறித்து யோசிக்கப்படும்.

மதுரை நகர் ஓட்டல் தொழிலாளர்கட்கு

10—9—55 இரவு 10 மணிக்கு, மதுரை, திண்டுக்கல் ரோடு, 102-ம் எண்ணுள்ள கட்டிடத்தில், மதுரை நகர் ஓட்டல் தொழிலாளர் கழக அமைப்புக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, 'திராவிட நாடு பிரிவினை நாள்' கொண்டாடுவது பற்றியும் ஆலோசிக்கப்படும்.

தென்கோடி பகுதி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கிலிருந்து உப்புத் தண்ணீர் உள்ளே வராமல் தடுப்பதற்காக 4300 அடி நீளத்துக்கு இரட்டைச் சுவர்கள் கட்டப்படும்; அச்சுவர்களுக்கு இடையில், காயலில் அகழ்ந்த மண் கொட்டப்படும். மதிலின் உயரம், கோடை காலத்திலுள்ள காயல் நீரின் உச்ச மட்டத்தைவிட, 3 அடி அதிகமாக இருக்கும். ஆலப்புழைக்கு வடக்கே 15 மைல் தூரத்தில் உள்ள 'தண்ணீர்முகம்' என்னுமிடத்தில் இந்த மதில் கட்டப்படும்; அம்மதிலில், கதவுகள் உள்ள 430 மதகுகள் (ஸ்லூயிஸ்) இருக்கும்; அவைகளின் வழியே மீனச்சில் ஆற்றின் வெள்ள நீர் வெளியே பாயும்; படகுப் போக்குவரத்துக்கு வசதியாக 'லாக்' வழிகளும் ஏற்படுத்தப்படும். மதிலின் மேலே 40 அடி அகலமுள்ள பாதை செல்லும். இத்திட்டத்தினால் கொச்சித் துறைமுகத்துக்கு எந்தவிதமாகவாவது பாதகம் ஏற்படுமா என்று இப்போது பரிசீலிக்கப்பட்டுவருகிறது; அப்பரிசீலனை முடிந்த பின் இது சம்பந்தமான வேலை ஆரம்பமாகும்.

குட்டநாட்டின் மூன்று முக்கிய பிரச்சினைகளும் இத்திட்டத்தால் தீர்ந்துவிடும் - அதாவது, வெள்ளம் பூமியில் வியாபிக்காது; பூமி, உவர் பூமியாகாது; போக்குவரத்து வசதி அதிகமாகும்.

1,20,000 ஏகரா நிலத்தில் இனி இருபோக சாகுபடி நடைபெறும். அதனால், நெல் விளைச்சல் வருடத்துக்கு 60,000 டன் அதிகரிக்கும்; போக்குவரத்து அபிவிருத்தியால் வர்த்தகம் பெருகி செல்வம் செழிக்கும்; மக்கள் வசிப்பதற்கு ஏராளமான இடமும் கிடைக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.